

# பனிமயம்

மே 2021

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-

## *பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...*

உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

தூய ஆவியாரின் கனிகளான அமைதியும், மகிழ்ச்சியும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

மே மாதம் என்றதும் நம் நினைவுக்கு வருவது அன்னையின் மாதம் என்பதல்லவா! ஆம், மரியன்னையை சிறப்பாகக் கொண்டாடும் காலம் இம்மாதம். எனவே, தூத்துக்குடி மாநகரக் கத்தோலிக்கர்கள் அனைவருக்கும் மரியன்னையைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்கும் ஒரு விழாவாக "**மரியன்னை மாநாடு**" எதிர்வரும் **08.05.2021** சனிக்கிழமை ஸ்நோஸ் அரங்கத்தில் நாள் முழுவதும் நடைபெறவிருக்கிறது. மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகையின் ஆசி மற்றும் அருளுரையோடு தொடங்கும் இந்த விழாவில் தூத்துக்குடி நகரின் அருள்பணியாளர்கள், துறவியர், இறைமக்கள் திரளாகக் கலந்துகொண்டு அன்னையைக் கொண்டாட அன்புடன் அழைக்கிறேன்.

மே மாதம் என்றதும் "**விடுமுறை விவிலியப் பள்ளி**"யும் நம் நினைவுக்கு வருகிறது. எனவே, ஏப்ரல் **30** முதல் மே **09** வரையில் நடைபெறவிருக்கும் **10** நாள் விடுமுறை விவிலியப் பள்ளியில் நமது பிள்ளைகள் இறைவார்த்தைமீது ஆர்வத்தையும், தாகத்தையும் வளர்த்துக்கொள்வார்களாக!

மே மாதம் என்றதும் பெந்தகோஸ்தே பெருவிழாவும், **தூய ஆவியாரும்** நினைவுக்கு வருவதும் நன்றே! எனவே, நமது பிள்ளைகள் உறுதிப்பூசுதல் அருள்சாதனம் பெற தூய ஆவியாருக்காக ஏங்கி மன்றாடும் நாள்களாக இவற்றை மாற்றுவோம். பெரியோரும் தூய ஆவியார் பற்றிய பாசறையில் கலந்துகொண்டு அந்தத் துணையாளரின் ஆசியைப் பெறுவோம்.

மேற்கண்ட அனைத்தும், இறைவனுக்குத் திருவுளமானால், குறித்த நாள்களில் நடைபெறும். கொரோனாப் பெருந்தொற்றின் புதிய அலை தருகிற நெருக்கடிகளால் மாற்றங்கள் இருப்பின் அதையும் "ஆமென்" என்று சொல்லி ஏற்றுக்கொள்வோம்.

நிறை உண்மையை நோக்கி இட்டுச் செல்லும் தூய ஆவியாரின் நேசமான பனிமயத் தாயின் ஆசி உங்களோடு இருப்பதாக!

என்றும் அன்புடன்,
**அருள்பணி. குமார்ராஜா**
பங்குத் தந்தை & திருத்தல அதிபர்





உதயம் 21 தாரகை 9

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
**அருட்பணி. குமார்ராஜா**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : **'பனிமயம்'**
**தூய பனிமய அன்னை பேராலயம்**
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**நிதி உலகம்**

நிதித் துறையை ஒழுங்கு படுத்துவதற்கும் அதன் ஆபத்து களிலிருந்து குடிமக்களைப் பாது காப்பதற்கும் நிதிப்பொறுப்பாளர் கள் அரசாங்கங்களுடன் இணைந்து செயல்படுவார்கள் என்று மன்றாடுவோம்.

# உள்ளே...

1. **பனிமய அன்னை** ....................4
   தி. சொர்ணராஜன் விக்டோரியா

2. **பேராலய வரலாறு** ....................6
   செல்வராஜ் மிராந்தா

3. **பனிமயம் - மீள்பார்வை** ....................8
   கலாபன் வாஸ்

4. **மரியன்னைப் பவனிகள்!** ....................10
   அருள் மரி வேந்தன்

5. **இரக்கத்தின் மாதா** ....................12
   அருள்பணி. ஸ்டார்லின் ச.ல.

6. **மரியன்னை புனிதர்கள் :**
   **அருளாளர் ஃப்ரட்ரிக் ஓசானாம்** ....................14
   அருள்பணி. குமார்ராஜா

7. **விவிலியப் போட்டி** ....................16

8. **மாதம் ஒரு மாதா படம்** ....................19

9. **பனிமயப் பகிர்வு** ....................20

பனிமய அன்னை 7

# இயேசு சபையின் தலைமை இல்லம்

**கொச்சி மறைமாநிலம்**

இந்தியாவில் இரண்டாவதாக அமைக்கப்பட்ட மறைமாநிலம், **கொச்சி மறைமாநிலமே**! கொச்சி மறைமாநிலத்தின் முதல் ஆயராக தொமினிக்கன் சபையை சார்ந்த **டொம் ஜார்ஜ் தேமுடோ** (Dom George Temudo, 1557-1567) நியமிக்கப்பட்டார். இவர் முதன்முறையாக முத்துக்குளித்துறைக்கு விஜயஞ்செய்து, பரவ கத்தோலிக்க மக்களுக்கு முதல் தடவையாக உறுதிபூசுதல் என்ற திருவருட்சாதனத்தை வழங்கினார்.

1557 ஆம் ஆண்டிலிருந்து முத்துக் குளித்துறை முழுவதும் கொச்சி மறைமாநில ஆயரின் ஞான அதிகாரத்திற்கு கீழ் வந்தது. இருப்பினும் கொச்சி ஆயரின் அனுமதியின் பேரில் இயேசு சபைக் குருக்களே தூத்துக்குடியில் தொடர்ந்து பணியாற்றி வந்தனர்.

1553 ஆம் ஆண்டில் திருவாங்கூர் மன்னரின் படையினரும் மதுரை நாயக்கனின் படையினரும் கடலோரக் கிராமங்களின் ஆலயங்களை எல்லாம் நெருப்பினால் அழித்துப் போட்டனர். அழிந்து போன ஆலயங்களை எல்லாம், என்றி என்றிக்கஸ் அடிகளார் (Henrique Henriques) 1558 ஆம் ஆண்டில் மீண்டும் கட்டி எழுப்பினார். 1558 ஆம் ஆண்டின் இயேசு சபை அறிக்கை, முத்துக்குளித்துறையில் மொத்தம் 40 ஆலயங்கள் இருந்ததாக கூறுகிறது. 1558 ஆம் ஆண்டு முதல், **சுவாமி தியோகு தி செவரால்** தூத்துக்குடி புனித இராயப்பர் ஆலயப் பங்குப் பொறுப்பினை ஏற்றார்.



கொச்சி ஆயர்
டொம் ஜார்ஜ் தேமுடோ

**இயேசு சபையின் தலைமை இல்லம்**

புன்னைக்காயலில் போர்த்துகீசியரின் கோட்டையும், அதில் அவர்களது நிர்வாகத் தலைமைத்தளமும், வர்த்தகச் சாவடியும் அமைந்திருந்தன. எனவே, முத்துக் குளித்துறைக்கு வந்த இயேசு சபைக் குருக்கள் புன்னைக்காயலைத் தங்களது முதல் தலைமைப் பணித்தளமாகத் தேர்ந்து கொண்டனர்.

கயத்தாறு குறுநில மன்னனும், மதுரை நாயக்கனும் அடிக்கடி புன்னைக்காயல் மீது படையெடுத்து சூறையாடி வந்ததால், இயேசு சபையினர் தங்களது தலைமை இல்லத்தை 1579 ஆம் ஆண்டில் புன்னைக்காயலில் இருந்து தூத்துக்குடிக்கு மாற்றிவிட்டனர்.

இயேசு சபையின் இந்த புதிய தலைமை இல்லம் புனித சின்னப்பருக்கு அர்ப்பணிக்கப் பட்டு **'சம்பவுல் காலேஜ்'** என்று அழைக்கப்பட்டது. முத்துக்குளிப்பில் இருந்து பரவ மக்கள் ஆண்டுதோறும் இவ்வில்லத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்து வந்த 2,000 குருசாதோ என்னும் தொகையைக் கொண்டே இந்த தலைமை இல்லம் நடத்தப்பட்டு வந்தது.

என்றி என்றிக்கஸ் அடிகளார். சுதேச குருக்களை உருவாக்கக் குருமடம் ஒன்றினை 1588 ஆம் ஆண்டில் தலைமை இல்லத்திற்கு அருகே உருவாக்கினார். இதுதான் தமிழகத்தில் தோன்றிய **முதல் குருமடம்**! மேலும் தென்னிந்தியாவில் இலத்தீன் ரீதியைச் சேர்ந்த முதல் குருமடமும் இதுவே! புதிதாக கட்டப்பட்ட குருமடத்து கட்டிடச் செலவுகள் அனைத்தையும் பரவ குலத்தின் தலைவர்களே அன்று ஏற்றுக் கொண்டனர்.

குருக்களின் பற்றாக்குறையின் காரணமாக ஆரம்பத்தில் 5 கடற்கரை ஊர்கள் மட்டுமே பங்குகளாக ஏற்படுத்தப்பட்டன. அவை தூத்துக்குடி, வேம்பார், புன்னைக்காயல், மணப்பாடு, திருச்செந்தூர் ஆகியவையாகும்.

1579-80 ஆண்டின் இந்திய மாநில இயேசு சபை அறிக்கையை சமர்ப்பித்த **சுவாமி அலெக்சாண்டர் வல்லிஞானோ** (Alexandar Valignano) முத்துக்குளித்துறையின் 30 கிறிஸ்தவ ஊர்களிலும் ஆலயங்கள் இருந்ததாக குறிப்பிடுகிறார். இங்கு பணியாற்றிய சுமார் 15 இயேசு சபைக் குருக்கள் வேம்பார், தூத்துக்குடி, புன்னைக்காயல், திருச்செந்தூர், மற்றும் மணப்பாடு ஆகிய ஊர்களில் நிரந்தரமாக தங்கியிருந்தனர்.

16 ஆம் நூற்றாண்டின் முடிவில், முத்துக்குளித்துறையின் கிறிஸ்தவ மக்கள், குறுநில மன்னர்களின் படையெடுப்பால் பலவித துன்பங்களுக்கு பலியாகினர். ஆகவே பாதுகாப்பு நலன் கருதி, இயேசு சபைக் குருக்கள் 1600 ஆம் ஆண்டில் முத்துக் குளித்துறையின் சிறுசிறு ஊர்களில் வாழ்ந்த மக்களையெல்லாம் ஏழு பெரிய ஊர்களில் குடியேற்றினர். இது குறித்து எழுதப்பட்ட 1600 ஆம் ஆண்டு இயேசு சபை அறிக்கை, அந்த ஏழு ஊர்கள் : தூத்துக்குடி, புன்னைக்காயல், வீரபாண்டியன்பட்டணம், திருச்செந்தூர், மணப்பாடு, வைப்பார், வேம்பார் என்று குறிப்பிடுகின்றது.

**மதுரை மிஷன்**

வியாபார நோக்குடன் மதுரை நகரில் குடியேறி வாழ்ந்து கொண்டிருந்த சுமார் 100 பரவ கிறிஸ்தவர்களின் ஆன்மீக நலன் கருதி, **சுவாமி கொன்சால்வஸ் பெர்னான்டஸ் அடிகளார்** (Goncalo Fernandez) மதுரை மிஷனைத் தோற்றுவித்தார்.

1595 ஆம் ஆண்டில் மதுரை நாயக்கன் **குமார கிருஷ்ணப்பா நாயக்கன்** என்பவரின் அனுமதியுடன், மதுரை நகரில் முதன் முதலாக கிறிஸ்தவ ஆலயமும், குருக்கள் இல்லமும், பள்ளியும் சுவாமி கொன்சால்வஸ் பெர்னான்டஸ் அடிகள் (Goncalo Fernandez) அமைத்தார். தூத்துக்குடியின் இயேசு சபைத் தலைமை இல்லம், மதுரை மிஷனுக்கும் தலைமை தாங்கி நின்றது.

இங்கிருந்துதான் மதுரை மிஷனுக்கு வேண்டிய குருக்களும் பொருளுதவியும் அனுப்பி வைக்கப்பட்டன. தூத்துக்குடி பரவ மக்கள், மதுரை மிஷனின் வளர்ச்சிக்காக தாராளமாகப் பொருளுதவி ஈந்தனர்.

காலப்போக்கில் இயேசு சபைக் குருக்களின் எண்ணிக்கை பெருகவே, முத்துக்குளித்துறையில் புதுப் பங்குத் தளங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1644 ஆம் ஆண்டின் இயேசு சபை அறிக்கையில், **சுவாமி ஆண்ட்ரு லோப்பஸ்** (Andrew Lopez) முத்துக்குளித் துறையில் 12 பங்குகள் இருப்பதாகக் குறிப்பிடுகிறார்.

அவை : 1. பெருமணல், 2. தாழை, 3. மணப்பாடு, 4. ஆலந்தலை, 5. வீரபாண்டியன் பட்டணம், 6. புன்னைக்காயல், 7. திருக்களூர் (உள்நாடு), 8. பழையகாயல், 9. தூத்துக்குடி, 10. வைப்பார், 11. வேம்பார், மற்றும் 12. பெரியபட்டணம்.

- (தொடரும்)

**தி. சொர்ணராஜன் விக்டோரியா**



தூய பனிமய அன்னை திருத்தல பேராலய வரலாற்றுக் குறிப்புகள் : 14





# பேராலய வரலாறு

போர்த்துக்கல்லுக்கு ஒதுக்கப்பட்ட 46°37” நெடுங்கோட்டுக்குக் கிழக்கே ஆப்பிரிக்க கண்டத்து நன்நம்பிக்கை முனையைக் கடந்து சுற்றிச் செல்லும் கடல் வழித்தடமும் ஆபத்து நிறைந்ததும் ஆறு முதல் எட்டு மாதங்கள் பிடிக்கும் நீண்ட பயணம்தான்.

கி.பி. 1621ஆம் ஆண்டு லிஸ்பன் (Lisbon, Portugal Port) துறைமுகத்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்ட பன்னிரண்டு கப்பல்களில் ஒன்றே ஒன்றுதான் இந்தியா சென்றடைந்தது. மற்றவை எல்லாம் சில புயலில் சிக்கி மூழ்கின. சில கரையில் மோதி உடைந்தன மற்றும் சில தாக்குப் பிடிக்க முடியாமல் திரும்பிச் சென்றன.

எனவே பெண்கள் செல்வதற்கு பாதுகாப்பற்ற பயணமாக இருந்தது. (C.R. Boxer “Mary and Misogyny” : ‘Women in Iberian Expansion overseas’ 1415 - 1815’, London 1975, Page 63). இப்பதிவும் கன்னியர் கீழ்த்திசை நாடுகளுக்கு வரவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.

ii) கோவா முதன்மை குரு **மிக்கேல் வாஸ்** 1555ம் ஆண்டு தூத்துக்குடியில் இருந்திருக்க இயலவே இயலாது. ஏனென்றால் அவர் **எட்டு ஆண்டுகட்கு முன்பே அதாவது 1547ஆம் ஆண்டே மரணமடைந்துவிட்டார்.**

தூத்துக்குடியில் பங்குக் குருவாக 1699ஆம் ஆண்டு பொறுப்பேற்ற அருள்தந்தை விஜிலியுஸ் மான்சி கி.பி. 1708ஆம் ஆண்டு அப்போது உரோமில் இருந்த அருள்தந்தை மரிய இஞ்ஞாசியோ அடிகளாருக்கு எழுதிய மடலில் அன்னையின் திருச்சுரூபம் காலி துறைமுகத் (இலங்கை) திலிருந்து வந்ததாகக் கூறுகிறார்.

அதுவே காலத்தால் முந்திய செய்தியாதலால் (17ஆம் நூற்றாண்டின் இறுதி / 18ஆம் நூற்றாண்டின் துவக்கம்) 19ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு பக்திப் பாரம்பரியமாக பேசப்பட்டுவரும் செய்தி ஒருவேளை ஐதிகமாக இருக்க வாய்ப்புண்டு.

நதிமூலம் ரிஷிமூலம் பார்க்கக் கூடாது என்று ஒரு இந்திய சமயச் சம்பிரதாயம் உண்டு. அதுபோல் பல அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கும் அன்னையின் பரிந்துரைக்கு ஒரு அடையாளமாக இங்கு கொலு வீற்றிருக்கும் அன்னையின் திருசுரூபத்தின் மூலமும் வரவும் பற்றிய ஆய்வு பக்திக் கண்ணோட்டத்தில் காணும்போது தேவையற்றதாகக் கருதப்படுகிறது.

(**குறிப்பு** : தூய பனிமய அன்னை பேராலய மறைப் பணித்தள மக்களிடம் ஒரு வழக்கம் இருப்பதைக் காண்கிறோம் : ஆண்டுதோறும் ஜூன் மாதம் முதல் அல்லது இரண்டாவது சனிக்கிழமை மதியம் ஒரு வண்டியில் சாந்த எலேனா என்ற ஒரு பாய்க்கப்பல் மாதிரியை நகர வீதிகளின் வழியாகச் சுற்றிவருவது, பின் ஞாயிற்றுக்கிழமை சிந்தாயாத்திரை மாதா திருவிழாக் கொண்டாடுவது,

மணமுடித்த புதுமணத் தம்பதியர் தங்கள் தாம்பத்திய வாழ்க்கையை தொடங்குமுன் சிந்தாயாத்திரை மாதா கோவிலுக்குச் சென்று வணங்கி எதிரே கடற்கரையில் தங்கள் கால்களை நனைத்து வருவது, போன்றவை.

நாவிஸ் - Navis - என்றால் லத்தீன் மொழியில் கப்பல்

நேவிஸ் - Nevis - என்றால் இஸ்பானிய மொழியில் பனி)

*- முற்றும்*

## துணை நின்றவை


1. *இடியின் இரகசியம் - அருள்முனைவர் எஸ். வெனான்சியுஸ். முதற்பதிப்பு - 1986*
2. *வரலாற்றில் புன்னைக்காயல் - அருள்முனைவர் அமுதன் அடிகள். முதற்பதிப்பு - 2012*
3. *நீலத்திரைகடல் ஓரத்திலே - நெல்லை மாவட்ட கத்தோலிக்கர் வரலாறு - போர்வாள் 1967*
4. *கதை சொல்லும் கல்வெட்டு*
5. *முதல் ஆலயம் ஒரு ஆய்வு*
6. *தோற்றமும் மாற்றமும்*

   (4–6: *தேர்மலர்களில் வந்த கட்டுரைகள்*)
7. *The Life of St. Francis Xavier by Rev Father D. Bartoli and J.P. Maffei 1923*
8. *The Jesuits in India 1542-1773 by Rev. John Correira Afonso s.g.*
9. *Saint Francis Xavier by Sornarajan T. Victoria*
10. *The Portuguese in Malabar - a Social History of Luso Indians by Charles Dias - 2013*
11. *The History of Tinnevelly by Bishop Caldwell*
12. *Passage to the Indies - Vasco da Gama by D.J.M. Nolan - Vol XX73 - 1971*
13. *Epic Voyage of Bartholemeu Dias by D.J.M. Nolan - Vol XIX 1971*
14. *"The Dragous Taile" - Magellan Vol XX74 by D.J.M. Nolan*




**செல்வராஜ் மிராந்தா**

# 'பனிமயம்' - மீள் பார்வை 20

2003

திருத்தந்தை (புனிதர்) இரண்டாம் ஜான்பால், எங்கு சென்றாலும் இயேசு கிறிஸ்துவையும், கன்னி மரியாவையும் ஆன்மீகத்தின் இரு தூண்கள் எனப் படம்பிடித்துக் காட்டுவார். "கிறிஸ்து இல்லாமல், மனிதனை முழுமையாகப் புரிந்து கொள்ள இயலாது" என்பார்.

"நான் யார்?" என்ற கேள்வி கேட்டுச் சிந்திக்க வைப்பதுடன், அதற்கான விளக்கமும் தருவார்.

"மனிதன் இதயத்தினால் அளக்கப்பட வேண்டும். விவிலியக் கண்ணோட்டத்தில் இதயமென்பது மனிதனின் உள்ளார்ந்த ஆன்மீகம்.... குறிப்பாகச் சொல்வதானால், மனச்சான்று. மனச்சான்று அடிப்படையிலேயே ஒரு மனிதன் அளக்கப்பட வேண்டும். கடவுளோடுள்ள திறந்த மனம்தான் அளவுகோல். தூய ஆவியானவர் தான் இதயத்தை நிரப்ப முடியும்." - **தேன்மலர்.**



✤ தூய பனிமய அன்னை பேராலயத்தில் நவவிலாச சம்மனசுகள்!... பனிமய அன்னை பேராலயப் புது மண்டபத்தை அலங்கரிக்கும் வண்ணமாக (ஒன்பது) நவவிலாச சம்மனசுகளின் சுரூபங்கள், 2003 பெப்ரவரி மாதம் 2-ம் தேதி மாலை 5.30 மணியளவில், **மேதகு ஆயர் பீற்றர் பர்னாண்டோ** அவர்களால் மந்திரித்துத்



திறந்து வைக்கப் பட்டன. **மேதகு ஆயர் M. அம்புரோஸ் ஆண்டகை** திருப்பலி நிறைவேற்றினார். (ஒன்பது வானதூதர்களின் சுரூபங்களையும் வடிவமைத்து உருவாக்கியவர். தமிழக அளவில் புகழ்பெற்ற கலைஞர் **தியோதோனியஸ் ரொட்ரீக்ஸ்** என்ற **தியோ ராஜன்** - கீழவைப்பாற்று ஓவியர் - சிற்பி... எனது தாய்மாமன் மகன்).

✤ எண்ணத்தே தூய்மை என்றும்
எண்ணுக! தன்போல் பிறரை
மண்ணிலே பிறரன்பு பாசம்
மலரும் புதுமை உறவு!

- கவிஞர் கலியாவூர் தாசன்

✤ புலரும் மே மாதம், மாதாவின் சிறப்புமிக்க வணக்க மாதமாக விளங்கட்டும். ஜெபமாலையில் கிறிஸ்தவ மக்களின் வாழ்வு புதுப்பொலிவு பெறட்டும். மனித சமுதாயத்தின் எல்லா தேவைகளும், இறைவனின் சிறப்பான ஆசீரால் நிறைவு செய்யட்டும். நம் அன்னை மரியாவும், தமது தாய்மைக்குரிய



அக்கறையினால், அனைவரையும் அரவணைத்துப் பாதுகாக்கட்டும். வாருங்கள், அன்னையின் திருத்தலங்களைச் செபக் கோபுரங்களாக மாற்றி, விண்ணகத்தை முற்றுகையிடுவோம். விண்ணகத் தந்தை தம் திருக்கரங்களைத் திறந்து நம்மை ஆசீர்வதிப்பாராக.

**- பங்குத்தந்தை அருட்தந்தை J. இரத்தினராஜ்.**

✤ தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயத்தில் இயங்கி வரும், **தூய பொம்பே மாதா பெண்கள் சபை,** 2003 மே மாதம் 8ஆம் தேதி, தமது 100-ஆவது ஆண்டினைக் கொண்டாடுகிறது. நூற்றாண்டு காணும் இச்சபை, மேன்மேலும் வளர்ச்சி பெறவும், திருச்சபை/பங்கின் மறுமலர்ச்சிப் பணியில் ஆர்வத்தோடு செயல்படவும் வாழ்த்துகிறோம் - 'பனிமயம்'.

✤ திராட்சைக் கொடியில் பெரிதும் மருத்துவப் பயனளிப்பது கனியேயாகும். திராட்சைக் கனியில் பெருமளவு நீரும், மாவுப் பொருளும், உப்பு நீர் மற்றும் கொழுப்புச் சத்துகளும் உண்டு. மிக்க குளிர்ச்சி தருவது. இரத்தமும், தாதுவும் அபிவிருத்தி அடையும். பித்தத்தைத் தணிக்க வல்லது. மலத்தை இளக்கும். சிறுநீரைப் பெருக்கும். உலர்ந்த திராட்சை, உள்ளுறுப்புகளின் அழலைத் தணிக்கும்.

குடல் புண் உள்ளவர்கள் திராட்சைப் பழச் சாற்றை, காலை, பகல், மாலை என மூன்று வேளை இரண்டு அவுன்ஸ் வீதம் அருந்தினால் குடல்புண் குணமடையும். - 'அடித்தளம்'.

✤ போவதும் வருவதும் பொருப்புடன் நம்வழிக்
காவலில் இருப்பவன் கடவுளே! ஆயினும்
பாவமாம் செயலினால் படுகுழி வீழ்ந்துபோய்ச்
சாவது மனிதரின் சறுக்கலே காரணம்!

**- செல்வராஜ் மிராந்தா**

✤ மரியாள் துதிப் பாடல்களில் மிகவும் புகழ்மிக்க பாடல் 'SALVA REGINA'. இந்தப் பாடலுக்கு, **கிளேர்வாக்ஸின் புனித பெர்னார்ட்** ( (ST. PERNARD OF CLAIR VAUX) தான் ஆசிரியர். இந்தத் துதிப் பாடல், மரியாள் மேல், அதாவது, இரக்கத்தின் மாதா மேல் கொண்டுள்ள முழு நம்பிக்கையை விளக்குகிறது. ஏவாளின் தவறான செய்கையினால் சிதறடிக்கப்பட்ட அவள் மக்களின் இனிமையும் நம்பிக்கையும் அவளேயாவாள்.

மற்றொரு பாடல் 'ALMA REDEMPTORIS MATER' - இப்பாடல், அன்னையிடம் பாவிகளுக்கு இரங்க வேண்டி, 11-ஆம் நூற்றாண்டில் ஒரு துறவியினால் அமைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.

ஆயினும், எல்லா மாதா செபங்களிலும் மேலானதாகக் கருதப்படுவது 'அருள் நிறை மரியே வாழ்க'. இந்தச் செபம் ஆறாம் நூற்றாண்டில் கீழ்த்திசை நாடுகளில் தோன்றியது. - **கிறிஸ்டியன் டிவோட்டா.**

✤ தூத்துக்குடி நகர சபைத் தலைவர்களாகப் பணியாற்றியோர் -



- J.M.P. ரோச் விக்டோரியா (முதல் நகர சபைத் தலைவர்) 10 ஆண்டுகள்
- குரூஸ் பர்னாந்து - 9 ஆண்டுகள்
- J.L.P. ரோச் விக்டோரியா - 20 ஆண்டுகள்

**- T. கேத்தரீன் மேரி**



**கலாபன் வாஸ்**
94863 90793

மரியன்னையின் மேன்மைகள் : 15

# மரியன்னைப் பவனிகள்!

மரியன்னைத் திருத்தலங்களில் தவறாது நடைபெறும் ஒரு பக்தி முயற்சி மரியன்னைப் பவனிகள். மரியன்னையின் திருவுருவத்தை ஒரு சப்பரத்தில் சுமந்து பாடல்கள் பாடிக் கொண்டும், செபமாலை செபித்துக்கொண்டும் பவனியாகச் செல்லும் பழக்கத்தை எங்கும் காண்கிறோம்.

உலகம் முழுவதும் மரியன்னைப் பவனிகள் நடந்தாலும், பிரான்ஸ் நாட்டின் லூர்துநகர் மரியன்னைப் பவனிதான் மிகவும் புகழ்பெற்றது. ஒவ்வோர் ஆண்டும் உயிர்ப்புப் பெருவிழாவிலிருந்து, அக்டோபர் மாதம் முடிய ஏறக்குறைய 7 மாதங்கள் ஒவ்வோர் இரவும் சரியாக 09.00 மணிக்கு லூர்து திருத்தலப் பேராலய வளாகத்தில் நடைபெறும் செபமாலைப் பவனியில் ஆயிரக்கணக்கான திருப்பயணிகள் ஆர்வத்துடன் கலந்துகொள்கின்றனர்.

நவம்பர் முதல் மார்ச் முடிய 5 மாதங்கள் குளிர் காலத்தை முன்னிட்டு பவனி நடைபெறாது. இருப்பினும், டிசம்பர் 8 அமல உற்பவ அன்னை விழா, பெப்ரவரி 11 லூர்து அன்னையின் விழா இரு நாள்களிலும் செபமாலைப் பவனி நடைபெறும். ஏறக்குறைய ஒரு மணிநேரம் நடைபெறும் இப்பவனியில் எரிகின்ற திரிகளைக் கையில் ஏந்தி செபமாலை செபித்துக்கொண்டே பவனி செல்கிறது. ஒவ்வொரு பத்து மணியின் இறுதியிலும் "ஆவே, ஆவே" என்ற பல்லவியின்போது, அத்தனை திரிகளும் கைகளில் உயரும்போது அது கண்கொள்ளாக் காட்சியாகும்.

பவனிகள் விவிலியக் காலத்திலிருந்தே நடைமுறையில் இருக்கின்றன. பழைய ஏற்பாட்டில் நெகேமியா நூலில்தான் பவனி என்னும் முதல் சொல்லாடலை நாம் காண்கிறோம். எருசலேம் மதிலின் அர்ப்பண நாளின்போதுதான் இந்தப் பவனி நடைபெற்றது. நீதிச் சட்ட வல்லுநரான எஸ்ரா இப்பவனிக்குத் தலைமையேற்றார். இரண்டு பாடகர் குழுவினர் முன் செல்ல ஏராளமான மக்கள் பின்தொடர மக்கள் பவனியாகச் சென்றனர் (நெகே 12: 31).

நெகேமியா நூலைத் தவிர பவனி என்னும் சொல் காணப்படும் பழைய ஏற்பாட்டின் ஒரே நூல் திருப்பாடல்கள் நூலே. யூதர்கள் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டபோது, அவர்கள் சொந்த நாட்டின் அனுபவங்களை எண்ணிப்பார்த்துத் துயருற்றார்கள். தங்கள் நாடு திரும்ப ஏங்கினார்கள். எருசலேமில் நடைபெற்ற விழாக்களையெல்லாம் நினைவுகூர்ந்தார்கள். "மக்கள் கூட்டத்தோடு சேர்ந்து **பவனியாகக்** கடவுளின் இல்லத்திற்குச் சென்றேனே! ஆர்ப்பரிப்பும் நன்றிப்பாடல்களும முழங்க விழாக் கூட்டத்தில் நடந்தேனே! இவற்றையெல்லாம் நான் நினைக்கும்போது, என் உள்ளம் வெகுவாய் வெதும்புகின்றது" (திபா 42:4) என்;று புலம்புகிறார் இந்த அடியார். இந்த வரிகளிலிருந்து எருசலேம் கோவிலுக்கு மக்கள் பவனியாகச் சென்றனர் என்பதுவும், அந்தப் பவனியிலே ஆர்ப்பரிப்பும், நன்றிப் பாடல்களும் முழங்கின என்றும் அறிகிறோம்.

விழாக்களின்போதெல்லாம் பவனிகள் நடைபெற்றன என்பதையும் திருப்பாடல் 118 வழியாக நாம் அறிகிறோம். "ஆண்டவரே இறைவன்; அவர் நம்மீது ஒளிர்ந்துள்ளார்; கிளைகளைக் கையிலேந்தி விழாவினைத் தொடங்குங்கள்; பீடத்தின் கொம்புகள்வரை **பவனியாகச்** செல்லுங்கள்" (திபா 118:27) என்று அழைக்கிறது இத்திருப்பாடல்.

மக்கள் பவனியாகச் செல்வது மட்டுமல்ல, ஆண்டவரே பவனியாகச் செல்கிறார் என்பது திருப்பாடல்கள் நூல் சொல்லும் ஒரு வியப்பான தகவல். கடவுளின் பவனி பற்றி மூன்று குறிப்புகள் இந்நூலில் காணக் கிடைக்கின்றன. "ஆரவார ஒலியிடையே **பவனி** செல்கின்றார் கடவுள்; எக்காளம்

முழங்கிடவே உயரே ஏறுகின்றார் ஆண்டவர்" (திபா 47:5) என்று திருப்பாடல் 47ம், "நீர்த்திரள்மீது உமது உறைவிடத்தின் அடித்தளத்தை அமைத்துள்ளவர்; கார் முகில்களைத் தேராகக் கொண்டுள்ளவர்; காற்றின் இறக்கைகளில் **பவனி** வருகின்றவர்" (திபா 104:3) என்று திபா 104ம் விவரிக்கின்றன.

உண்மையில், இயற்கையை, வான் முகில்களை, காற்றில் ஆடும் மலர்களைக் காணும்போதெல்லாம், அவற்றில் கடவுளைக் காண்பவர்களுக்கு இறைவனின் பவனியை உணர்வது பெரிதில்லையே! எனவேதான், "கடவுளே! நீர் **பவனி** செல்வதை, என் கடவுளும் அரசருமானவர் தூயகத்தில் பவனி செல்வதை, அனைவரும் கண்டனர்" (திபா 68:24) என்று அறிக்கையிடுகிறார் திருப்பாடல் ஆசிரியர். இந்த உலகின் இயக்கமே கடவுளின் பவனிதான் என்னும் பார்வை ஓர் இறையியல் பார்வையல்லவா!

புதிய ஏற்பாட்டில் ஒரேயொரு முறை மட்டுமே "பவனி" என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. "கிறிஸ்துவோடு இணைந்து வாழும் எங்களைக் கடவுள் கிறிஸ்துவின் **வெற்றிப் பவனியில்** பங்கு கொள்ளச் செய்து எங்கள் வழியாய்த் தம்மைப்பற்றி யாவரும் அறியச் செய்கிறார்; இவ்வறிவு நறுமணம் போல் எங்கும் பரவுகிறது. இவ்வாறு செய்யும் கடவுளுக்கே நன்றி உரித்தாகுக" (2 கொரி 2:14) என்று எழுதுகிறார் பவுலடியார். அவரது பார்வையில் கிறிஸ்தவ வாழ்வு என்பதே ஒரு வெற்றிப் பவனிதான். என்னே ஓர் உயர்வான சிந்தனை!

பழைய ஏற்பாட்டு மரபைப் பின்பற்றித் தொடக்கத் திருச்சபையிலும் பவனிகள் நடைபெற்றதாக திருஅவைத் தந்தையரின் எழுத்துகளிலிருந்து அறிகிறோம். நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித பேசில், புனித அம்புரோஸ் இருவரின் கடிதங்களில் திருவழிபாட்டுப் பவனிகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. பிற்காலத்தில் கொள்ளை நோய்கள், பஞ்சம் ஏற்பட்டபோது கடவுளின் இரக்கத்தை இறைஞ்சி புனிதர்களின் அருளிக்கங்களைப் பவனியாக எடுத்துச்செல்லும் பழக்கம்



உருவானது. கி.பி. 590ஆம் ஆண்டு உரோமையில் நடைபெற்ற பவனியின்போது திருத்தந்தை புனித கிரகோரியார் மிக்கேல் அதிதூதர் கொள்ளைநோயை வீழ்த்துவதாகக் காட்சி கண்டார் என்பது ஆவணப்படுத்தப் பட்டுள்ளது.

இத்தகைய பின்னணியில்தான் மரியன்னைப் பவனிகள் தோன்றின. லூர்து நகர்க் காட்சியாளரான பெர்னதத் 1858 ஆகஸ்ட் 14 மூன்றாவது காட்சிக்குப் பின்னர் மெழுகு திரியோடு வந்தார் என்று சொல்லப்படுகிறது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு 1863ஆம் ஆண்டு லூர்து நகர்ப் பங்குத் தந்தையான அருள்பணி. மரிய அன்றனி இந்த மெழுகுதிரிப் பவனியைத் தொடங்கி வைத்தார். இப்போது அது உலகப் புகழ்பெற்ற பவனியாக மாறிவிட்டது. 1983ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் ஜான் பவுல் லூர்துநகர் பவனியில் கலந்துகொண்டபோது "இந்த இரவிலே நாம் தனியாக செபிக்கவில்லை, மாபெரும் திரளாக உயிர்த்த இயேசுவைப் பின்தொடர்ந்து, ஒருவர் மற்றவருக்கு ஒளியேந்திப் பயணிக்கிறோம்" என்று சொன்னார்.

ஆம், ஒவ்வொரு மரியன்னைப் பவனியும் இயேசுவின் உயிர்ப்பின் பவனி. அதில் நாம் ஒருவர் மற்றவரோடு இணைந்து ஒற்றுமையாக, ஒரே மனதோடு கலந்துகொள்வோம். இந்தப் பவனி நம் வாழ்வின் வெற்றிப் பவனியாக, நம் பாஸ்காப் பயணத்தின் முன் அடையாளமாக இருப்பதாக!

**அருள் மரி வேந்தன்**

# இரக்கத்தின் மாதா



உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல் நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள் என்பது இறைவார்த்தை. அன்னையின் இரக்கத்தை தந்தை கடவுளின் இரக்கத்துடன் ஒப்பிட்டு எவ்வாறு அன்னை இரக்கத்தின் அன்னையாய் திகழ்ந்தாள் என்பதை சிந்திப்போம்.

தந்தையின் இரக்கத்தை நாம் இரண்டு வழிகளில் கண்டுணர முடியும். முதலாவது நலிந்தோர் ஏழை எளியோர் அடிமைப்படுத்தப் பட்டோர் ஆகியோர் மேல் இறைவன் கொண்ட அளவிட முடியாத இரக்கம். இரண்டாவது பாவம் செய்து வழிதவறியோர் மீது கொண்ட இரக்கம். இவ்விரண்டையும் அன்னையின் வாழ்விலும் நாம் காணமுடியும். முதலாவது, நலிந்தோர் மேல் இறைவன் கொண்ட இரக்கம் வி.ப 3வது அதிகாரம் பின்வருமாறு கூறுகின்றது. என் மக்களின் அழுகுரலை கேட்டேன். அவர்கள் படும் துன்பத்தை கண்டேன். அவர்களை மீட்க இறங்கி வந்துள்ளேன் என்று கூறும் இறைவனின் சொற்றொடர்கள் அவரின் இரக்கத்தை பறை சாற்றுகின்றன.

ஆக, இறைவன் துன்பப் படுவோரின் அழுகுரலைக் கேட்டு அவர்களின் துன்பத்தை கண்டு செயலற்று இருப்பவரல்ல. மாறாக, மக்களை மீட்க இறங்கி வந்த கடவுளாக திகழ்கின்றார். தன் நிலையைவிட்டு தன் உதவி தேவைப்படும் மானிடரைத் தேடிச் சென்று மீட்பதில்தான் அடங்கியுள்ளது இறைவனின் இரக்கம். இதைத்தான் ஒசேயா இறைவாக்கினர் இவ்வாறு கூறுவார், "நான் விரும்புவது பலியை அல்ல இரகத்தை" என்று அவர் இவ்வாறு கூறக்காரணம், பணக்காரர்களும், ஆட்சி அதிகாரம் படைத்தவர்களும் ஏழைகளை விற்று அவர்களின் இரக்கத்தை உறிஞ்சி வாழ்ந்து வந்தனர். எனவே இறைவன் எனக்குத் தேவையானது உங்களது உங்களது கொழுத்த பலிகள் அல்ல, மாறாக தேவையில் உழலும் மக்கள் மேல் நீங்கள் கொள்ளும் அன்பும் அக்கறையும் பரிவுமே நான் தேடும் உண்மையான பலியாகும் என்று கூறுகின்றார்.

தந்தை கடவுளின் அன்பு மகளாக திகழ்ந்த நம் அன்னை இதை தன் வாழ்வில் வாழ்ந்தார் என்பது எள்ளளவம் மறுக்க முடியா உண்மை. இதனை அவளின் பல்வேறு வாழ்வு நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

முதலாவதாக, அன்னை தள்ளாத வயதில் கருவாகி நின்ற இயேசுவின் முன்னோடியாகிய திருமுழுக்கு யோவானின் அன்னையாகிய எலிசபெத்தை தேடிச் சென்றதை குறிப்பிட முடியும். தான் கடவுளின் தாய் என்ற மமதையை கைவிட்டு எலிசபெத் தன் உதவி



தேவைப்படுபவர், கடவுளின் தாய் என்ற அழைப்பு பிறருக்கு இரக்கம் காட்டுவதற்கான அழைப்பு என்பதை உணர்ந்தவளாய் எலிசபெத்தை தேடிச் சென்றாள் தாய்மரி. கானாவூரில் ஏழைகளக்காக பரிந்து பேசியது, திக்கற்று நின்ற சீடர்களுக்கு தாயாய் இருந்து வழிநடத்தியது என அன்னையின் இரக்கச் செயல்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும்.

தன்னால் தன்னை காத்துக்கொள்ள முடியாத நிலையில் இருந்து குழந்தை இயேசுவை ஏரோதின் கோபத்திலிருந்து காத்ததும், பன்னிரெண்டு வயதில் காணாமல் போன தன் மகன் திரும்பி வரட்டும் என காத்திராமல் திரும்ப தேடிச் சென்று அழைத்து வந்ததும் அன்னையின் இரக்கத்தின் சின்னங்களே என்பதும் மறுக்க மறக்க முடியா உண்மை. இவ்வாறு ஏழை எளியவர் சார்பாக திக்கற்றவர்கள், இறை உதவியை மட்டுமே நம்பிவாழ்பவர் அன்னையின் அன்பு மக்களாய் திகழ்ந்தனர். இதனால் தான் கடவுள் இவர்கள் சார்பாய் இருக்கின்றார் என்பதை புகழ்ந்து பாடி "தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்" என அவரால் முழக்கமிட்டு உரைக்க முடிந்தது.

இரண்டாவதாக, இறை இரக்கத்தை இறைவனின் மன்னிக்கும் தன்மையில் நாம் காணமுடியும். இதைத்தான் 2குறி 30:9 இவ்வாறு கூறுகின்றது : உங்கள் கடவுளாம் ஆண்டவர் அருளும் இரக்கமும் கொண்டவர்: நீங்கள் அவர்பால் திரும்பினால், அவர்தம் முகத்தை உங்களிடமிருந்து திருப்பிக் கொள்ளார் எனக் கூறுகின்றது. இஸ்ரயேல் மக்கள் தங்கள் வாழ்வின் குறிக்கோளை மறந்து வழிதவறி சென்றபோதெல்லாம் அவர்களை தன் அன்பால் அழைத்து வந்தவர் இறைவன் என்பது இதிலிருந்து புலப்படுகின்றது. இறைவனின் இந்த பேரன்பை மீக்கா இறைவாக்கினர் 7:18ல் மிக அழகாக கூறுகின்றார் இறைவா, உமக்கு நிகரானவர் யார்? அவர் தம் சினத்தில் நிலைத்திரார்! ஏனெனில் அவர் பேரன்பு கூர்வதில் விருப்பமுடையவர். ஆக, இறைவன் குற்றம் புரிந்தோரை தண்டிப்பதில் அல்ல, அவர்களைத் தம் பிள்ளைக்கள் என்ற நிலையில் வைத்து அன்பு செய்வதில் அதிக ஆர்வம் கொண்டவர்.

அன்னையின் வாழ்வும் இதற்கு எடுத்துக்காட்டாய் திகழ்கின்றது. தன்னை அறியாமல் கோவிலில் தங்கிவிட்ட தம்மகன் தங்களது ஏக்கத்தை, தேடலை புரிந்து கொள்ளாமல் மனம் நோக பேசியபோதும் சரி, தான் தன் மகனைத் தேடி சென்றபோது, "யார் என் தாய்?" என்ற வார்த்தைகளால் கலங்கடிந்த போதும் சரி, தன் மகனை தன் மகனாகவேப அன்பு செய்து ஏற்றுக்கொண்டு அமைதியாக உடன்பயணித்தவள் நம்தாய். தன்மகனை நன்மைகள் மட்டும் செய்த தன் மகனை கள்வர்களைப் போல் சிலுவையில் அறையக் கண்டபோது, அவ்வாறு செய்தவர்களை புழுதி வாரி தூற்றாமல் அமைதியாய் மௌனம் காத்தவள் நம் அன்னை. தந்தையே இவர்களை மன்னியும் தான் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள் என்ற இயேசுவின் வார்த்தைகள் தான் அவளின் வாழ்வாகவும் அமைந்திருக்க வேண்டும் என்பதே கண்கூடு. இதனால் அவளை இரக்கத்தின் தாய் என்பதில் மறுக்க ஒன்றுமில்லை.

இந்த அன்னையை நம் தாயாக கொண்ட நாம், அவளின் பிள்ளைகளாய் இரக்கத்தை நம் வாழ்வாக்குவோம் நம்முடன் வாழும் ஏழை, எளியோர் நலிந்தோர், துன்புறுவோர் என அனைவரும் நம் சொந்தங்களே என்று உணர்வோம். நமக்கு தவறிழைத்தோரும் இறைவனின் பிள்ளைகளே என்பதை ஏற்றுக்கொண்டு மன்னித்து வாழ உறுதியெடுப்போம். இறைவனின் கரமும் அன்னையின் வழிநடத்துதலும் நமக்கு துணைசெய்வதாக.



**ஸ்டார்லின் ச.ல.**

# அருளாளர் ஃப்ரட்ரிக் ஓசானாம்

(1813 - 1853)

## அன்புப் பணியாற்றிய அன்னையின் மகன்!



புனித வின்சென்ட் தே பவுல் சபையின் பெயரை நாம் அனைவரும் அறிவோம். ஆனால், இந்த சபையின் நிறுவனர் பெயர் பலருக்கும் தெரியாது. இன்று உலகின் 153 நாடுகளில் அறப்பணிகள் செய்யும் வின்சென்ட் தே பவுல் சபையின் நிறுவனர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஃப்ரட்ரிக் ஓசானாம். இவர் திருமணமானவர். ஆனால், புனித வாழ்வும், அன்புப் பணிகளும் ஆற்றியதால், திருஅவை இவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தியுள்ளது. இவர் புனிதர் என அறிவிக்கப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதே பலரின் நம்பிக்கை.

அருளாளர் ஃப்ரட்ரிக் ஓசானம் பன்முக ஆளுமைக்குச் சொந்தக்காரர். எழுத்தாளர், பேராசிரியர், அறிஞர், பத்திரிகையாளர் மற்றும் வழக்கறிஞர். இவற்றோடு சேர்ந்து நல்ல கத்தோலிக்கர். எனவேதான், ஏழைகளுக்கு அறப்பணிகள் ஆற்றுவதற்காக வின்சென்ட் தே பவுல் சபையைத் தோற்றுவித்தார். அத்துடன், இவரும் ஒரு மரியன்னையின் அன்பு மகன் என்பது மரியன்னையின் பிள்ளைகளுக்குக் கூடுதல் மகிழ்வு தரும் செய்தி.

யூத மரபுவழி வந்த ஜான் ஓசானாம், மேரி ஓசானம் தம்பதியரின் 14 குழந்தைகளில் ஐந்தாவதாக 1813ஆம் ஆண்டு பிறந்தவர். மிலான் நகரில் பிறந்து, லயன்ஸ் நகரில் வளர்ந்தார். இளம் வயதில் கத்தோலிக்க இறை நம்பிக்கையில் ஐயம் கொண்டார். இருப்பினும், அவருக்குக் கற்றுக்கொடுத்த அபே நோய்ரோ என்னும் அருள்பணியாளரின் உதவியால் ஊக்கம் பெற்றார். பின்னர், திருஅவைப் பணிகளில் ஈடுபட்டார். கத்தோலிக்க இதழ்களில் எழுதினார். நற்செய்தி நூல்களிலுள்ள சமூகப் போதனைகள் பற்றிய விவாதங்கள், எழுத்துகள், செயல்பாடுகளில் மிகுந்த ஆர்வம் காட்டினார். பாரிஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

ஒருமுறை கத்தோலிக்கத் திருஅவையின் சிறப்புகள் பற்றி உரையாற்றியபோது, கூட்டத்திலிருந்த ஒருவர், “எல்லாம் சரிதான். பாரிஸ் நகரிலுள்ள ஏழைகளுக்கு உங்கள் திருஅவை என்ன செய்கிறது?” என்று கேட்டார். இக்கேள்வியால் திடுக்கிட்ட ஓசானாம், அன்புப் பணிகளில் இறங்கினார். 1833ஆம் ஆண்டு வின்சென்ட் தே பவுல்

சபையைத் தோற்றுவித்தார். முதலில் இது "அன்பின் இயக்கம்" (Conference of Charity) என்றுதான் அழைக்கப்பட்டது.

1841ஆம் ஆண்டு ஜூன் 23 அன்று அமலி என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். ஒவ்வொரு மாதமும் 23ஆம் நாள் மனைவிக்கு ஒரு பூங்கொத்து கொடுக்கும் பழக்கம் உடைய நல்ல கணவராக இருந்திருக்கிறார். 1845ஆம் ஆண்டு மேரி என்னும் மகள் பிறந்தாள்.

உடல் நலக்குறைவின் காரணமாக 40 வயதிலேயே இறைபதம் சேர்ந்தார். இருப்பினும், அந்தக் குறுகிய காலத்தில் தனது அன்புப் பணிகளின் காரணமாகப் புகழ் பெற்றார். அவரது இறைபக்தி பற்றி அவரது மனைவி "ஒவ்வொரு நாளும் விவிலியத்தை வாசித்து, தியானிப்பார். ஒவ்வொரு நாளும் திருப்பலியில் தவறாமல் பங்கெடுப்பார். செபிக்காமல் எந்தப் பணியையும் முன்னெடுப்பதில்லை" என்று எழுதியுள்ளார்.

